இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 09-08-2025

# மாண்புமிகு உதயநிதியின் இரண்டு போர்க் கருவிகள்!

திராவிட இயக்கம் காலம்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்திருக்கிறது. அதனால்தான் அது எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்த பிறகும் உயிர்ப்போடு இருக்கிறது.

**‘கடைசிச் சூத்திரன் இருக்கும்வரை எனது தொண்டு தொடரும்’ என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள். ‘நமக்கான தேவை இன்னும் பல ஆண்டுகளுக்கு இருந்து கொண்டே இருக்கும்’ என்றார் பேரறிஞர் அண்ணா. ‘ஒரு கருணாநிதி போனாலும் ஆயிரம் கருணாநிதிகள் வந்துகொண்டே இருப்பார்கள்’ என்றார் தமிழினத் தலைவர் கலைஞர். இந்தச் சொற்களுக்குப் பின்னால் தொலைநோக்குப் பார்வை மட்டுமல்ல; உண்மையான அக்கறை ஒன்று இருக்கிறது. ‘என்னோடு இது முடியாது, எனக்குப் பிறகு வருபவர்களும் இதனைத்தான் செய்ய வேண்டும், செய்தே ஆக வேண்டும்’ என்பதுதான் அது!**

தந்தை பெரியாரின் சமூகநீதியை - பேரறிஞர் அண்ணாவின் மொழி, இனமான உணர்வை - தமிழினத் தலைவர் கலைஞரின் மாநில மேம்பாட்டை அப்படியே துளி சேதாரமும் இல்லாமல் காப்பாற்றி வருகிறார் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அவர்கள் காலத்தில் இருந்ததைவிட இன்னமும் மேம்பட்ட நிலைக்கு, உன்னதமான நிலைக்கு உயர்த்தி நிலைநிறுத்திவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கட்சியையும் ஆட்சியையும் ஒரே நேரத்தில் ஒன்றுபோல முதன்மை இடத்துக்குக் கொண்டுவந்து நிலைநிறுத்துவது சாதாரண சாமான்ய செயல் அல்ல. தான் தலைமைப் பொறுப்புக்கு வந்தபிறகு சந்தித்த தேர்தல்கள் அனைத்திலும் வென்று காட்டியதும், ஆட்சி அமைத்த நான்காண்டு காலத்தில் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்தியதும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான சாதனைகள் ஆகும். இதே வழித்தடத்தில் கொள்கை - நிர்வாகத் திறன் ஆகிய இரண்டிலும், வெற்றிக்குரியவராக தன்னை அடையாளப்படுத்தி வருகிறார் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள்.

ஆகஸ்ட் 7 - தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவுற்ற நாள். அந்த நாளில் தலைவர் கலைஞருக்குப் பிடித்த இரண்டு செயல்களை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.

* திராவிட இயக்க இதழியல் வரலாற்றில் 250-க்கும் மேற்பட்ட இதழ்கள் நமது இயக்கத்தவர்களால் நடத்தப்பட்டன என்பார் திராவிடவியல் அறிஞர் க.திருநாவுக்கரசு. இதழ் நடத்தினார்கள். கொள்கையைப் பரப்பினார்கள். இந்த வரிசையில் வரலாற்றின் அடுத்த கட்டப் பாய்ச்சலை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். ‘கலைஞர் மாணவப் பத்திரிக்கையாளர் திட்டம்’ என்பது தான் அந்தப் பாய்ச்சல் ஆகும். திராவிட இயக்கம் இதழியலுக்குத் தேவையான மாணவர்களைத் தானே தயார் செய்து கொள்ளும் திட்டம் இது. ‘முரசொலி’ நாளிதழும், ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியும் இணைந்து இதனை நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

‘நடுநிலை’ என்ற போர்வையில் குறுக்குச்சால் ஓட்டிக் கொண்டிருக்கும் பத்திரிக்கையாளர்களுக்கு மத்தியில் ‘கலைஞர் மாணவப் பத்திரிக்கையாளர்கள்’ என்ற அடைமொழியோடு ஒரு படை கிளர்ந்தெழுவது காலத்தின் கட்டாயம் ஆகும். நீதிக்கும் அநீதிக்குமான போரில் ‘நடுநிலை’ வகிப்பது போலித்தனமானது ஆகும். நீதியின் பக்கமாக நிற்பதுதான் சரியான நடவடிக்கை ஆகும். அத்தகைய ஊடகவியலாளர்களை உருவாக்க நினைக்கிறார் துணை முதலமைச்சர் அவர்கள்.

* திராவிட முன்னேற்றக் கழகம் என்பது பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டது. ‘எனது தம்பிமார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதங்களில் திறமைசாலிகள்’ என்பார் அண்ணா. அப்படித்தான் அவர்களை உருவாக்கினார்கள். அதேபோன்ற இளம் ஆய்வாளர்களை உருவாக்குவதற்கு ‘கலைஞர் நிதி நல்கைத் திட்டம்’ தொடங்கி இருக்கிறார் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

திராவிட இயக்கம் குறித்த தலைப்பைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு ஒரு லட்சம் பணம் வழங்கப்படுகிறது. அந்த ஆய்வேட்டை வழங்கியதும், அது ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ சார்பில் வெளியிடப்பட இருக்கிறது. இதன்மூலமாக ஏராளமான ஆய்வாளர்கள் கிடைப்பார்கள். ஆய்வேடுகள் கிடைக்கும்.

கலைஞர் மாணவப் பத்திரிக்கையாளர் திட்டமும், இளம் ஆய்வாளர்களுக்கான கலைஞர் நிதி நல்கைத் திட்டமும் திராவிட இயக்கத்தின் போர்க்கருவிகளை உற்பத்தி செய்யும் திட்டங்கள் ஆகும். மாண்புமிகு துணை முதலமைச்சரைப் பார்த்தால் இன எதிரிகள் எரிச்சல் அடைவதற்குக் காரணம், ‘திராவிடக் கொள்கைவாதியாக இருக்கிறாரே?’ என்பது தான். ‘திராவிடக் கொள்கைவாதிகளை உருவாக்குகிறாரே?’ என்பது தான்.

**வெறுமனே இடத்தை நிரப்புவதற்காக வந்தவர் அல்ல மாண்புமிகு உதயநிதி. அவர் தமிழினத்தை முன்னேற்றுவதற்காக வந்தவர். இலட்சக் கணக்கான இளைஞர்களை திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள் கொண்டு வந்ததும், அவர்களைக் கொள்கை வாதிகளாக வளர்த்தெடுக்க பாசறைக் கூட்டங்கள் நடத்தியதும், தினந்தோறும் அறிவூட்ட ‘முரசொலி’ நாளிதழில் பாசறைப் பக்கம் தயாரித்து வழங்கி வருவதும், இருநூறுக்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்களை உருவாக்கியதும்தான் மாண்புமிகு உதயநிதி அவர்கள் திராவிட இயக்கத்துக்கு ஆற்றும் பெரும் பணியாகும். அதன் தொடர்ச்சியாக திராவிட மாணவப் பத்திரிக்கையாளர்களை, திராவிட இளம் ஆய்வாளர்களை உருவாக்குவது என்பது காலத்தின் தேவையாகும்.**

பெருமையும், புகழும் செய்யும் செயலால் கிடைக்கிறது. அந்த வகையில் தனது செயலால் பெருமையும் புகழும் அடைகிறார் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள்.



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ”உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



கழகத் தலைவர் – முதல்வர் அவர்களை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், அன்னவாசல் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.சந்திரன் தனது மணி விழா நிறைவு நாளையொட்டி தனது குடும்பத்துடன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளைய சூரியன் உள்ளார்.

## முதியோர் – மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று

# ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யும் ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்’!

## ஆக.12–இல் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஆக.9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை“ சென்னையில் வருகிற 12.8.2025 அன்று தொடங்கி வைக்கிறார்.**

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய எண்ணத்தின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12.8.2025 அன்று சென்னை யில் தொடங்கி வைக்கப் பட உள்ளது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும், ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மின்னணு எடைத்தராசு, EPoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்குவதால் அரசுக்கு ரூ.30.16 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும்.

முதலமைச்சர் அவர்கள் 12.8.2025 அன்று இத்திட்டத்தை சென்னையில் தொடங்கி வைக்கும் வேளையில், மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

# கேரள மாநில தி.மு.க. அவசர அமைப்புக் கூட்டம்!

## மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!



இவ்வாறு கே.ஆர். முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

கொல்லம், ஆக. 9 -

கேரள மாநில தி.மு.க. அவசர அமைப்புக்கூட்டம் இன்று (9.8.2025 - சனிக்கிழமை) புனலூர் ஜெம்ஸ அரீனா ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது என்று மாநில அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள மாநில தி.மு.க. அமைப்புக் கூட்டம் இன்று (9.8.2025 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் கொல்லம் மாவட்டம் புனலூர் ஜெம்ஸ அரீனா ஆடிட்டோரியத்தில் ரஞ்சித் கே.எஸ். தலைமையில் கொல்லம் மாவட்டக் கழகச் செயலாளர் ரெஜிராஜ் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் வர இருக்கும் கேரள மாநில உள்ளாட்சி தேர்தல் மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட உள்ளது. இந்தக் கூட்டத்தில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள பதினான்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மற்றும் அவரது புதல்வர் இரா.அருள் செல்வன், கலைஞர் இல்ல உதவியாளர் சு.மோகன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.